








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 2019

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 17.08.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்











## தேசிய நிகழ்வுகள்

- **சமூக ஊடகங்களை பொதுமக்கள் பொறுப்புடன் கையாள வேண்டும் என சென்னை பெருநகர காவல் ஆணையர் ஏ.கே.விசுவநாதன் தெரிவித்தார்.**
  - 'உஷார் பயன்பாட்டாளர்கள் மற்றும் சகலகலா பூச்சாண்டி' என்ற விழிப்புணர்வு குறும்படம் வெளியீட்டு விழா, வேப்பேரியில் உள்ள சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

- **வரும் 2027 ஆம் ஆண்டில் உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா இருக்கும் என்று ஐ.நா. கணித்துள்ளது.** எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் குறையக்கூடும் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.
  - இந்தியாவின் மக்கள்தொகை சுமார் 133 கோடியாக உள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்திய உள்ளது. சீனாவின் மக்கள்தொகை சுமார் 138 கோடியாகும்.
  - மேலும் 2065 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் மக்கள் தொகை குறையத் தொடங்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது

## விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக ரவி சாஸ்திரி வரும் 2021 வரை மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.** ஜாம்பவான் கபில்தேவ் தலைமையிலான சிஏசி வெள்ளிக்கிழமை நடைபெற்ற நேர்காணலில் ரவி சாஸ்திரியை மீண்டும் பயிற்சியாளராக தேர்வு செய்தது.

- **இந்திய மல்யுத்த நட்சத்திர வீரர் பஜ்ரங் புனியா நாட்டின் உயர்ந்தபட்ச விளையாட்டு விருதான ராஜிவ் கேல் ரத்னா**

**விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- ○ விளையாட்டுத் துறையில் சிறப்பாக சேவை புரிந்த வீரர்கள், வீராங்கனைகளுக்கு அர்ஜீனா விருதுகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் மிகச்சிறந்த வீரருக்கு உயர்ந்தபட்ச விருதாக ராஜீவ் கேல் ரத்னா விருது தரப்படுகிறது. இதில் ஒரு விருது, ரூ.7.5 லட்சம் ரொக்கப்பரிசு அடங்கும்.

## நியமனங்கள்

- **காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370வது சட்டப்பிரிவை இந்தியா ரத்து செய்தது. காஷ்மீரை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்துள்ளது.** இந்த நிலையில், ஜம்முவில் கட்டுப்பாடுகள் வேகமாக தளர்த்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், ஜம்மு, சம்பா, கதுவா, உதாம்பூர் ஆகிய இடங்களில் 2ஜி மொபைல் இணையதள சேவை மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

- **அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்தமாட்டோம் என்ற இந்தியாவின் கொள்கை எதிர்காலத்தில் மாறுதலுக்கு உள்ளாகலாம் என்ற பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறினார்.**
    - ○ முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் முதல் நினைவு தினத்தையொட்டி அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, 1998 ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அணு ஆயுதச் சோதனை நடத்தப்பட்ட ராஜஸ்தான் மாநிலம், பொக்ரானுக்கு ராஜ்நாத் சிங் சென்றார். அங்கு அவரது படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.